1968 ஆகட்ஸ் 20]

திரு. கே. சகாதேவக் கண்டர்: தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிட்டுள்ள புத்தகங்களில் கம்பரசம், ஆரியமாயை . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த கேள்வி.

அரசினர் தொழிற் பயிற்சிப் பள்ளி, தேனி.

* 47 வினு.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், தேனி அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி மாணவர்கள் கடந்த ஒரு வருட காலமாக ஆசிரியர் இல்லை என்பதற்காக 13–11–1967 முதல் உண்ணுவிரதம் தொடங்கியுள்ளது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தேனி தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுபவர் எழுவர். 14-11-1967 ஒரு நாள் மட்டும் உண்ணு நோன்பு இருந்தனர். 15–11–1967 அன்று உண்ணு நோன்பு நின்றது. பயிற்சி பெறுபவர்கள் அன்று முதல் பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று வருகின்றனர்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் பயிற்சிப் பள்ளியில் ஒரு வருட காலத்திற்கு ஆசிரியர் இல்லை என்ற காரணத்தினுல் மாணவர்கள் உண்ணுவிரதம் இருந்தார்கள் என்பது உண்மையா? அப்படியானுல், திரும்பவும் எப்பொழுது ஆசிரியர் நியமிக்கப்பட்டார். இப்பொழுது ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து நிறைய விண்ணப்பங்கள் வந்துள்ளனவே? ஏன் இந்த ஆசிரியர் இடம் காலியாக இருந்தது, பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தேனி அரசினர் தொழிற் பயிற்சிப்பள்ளியில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் உள்ளன. ரேடியோ அண்டு டெலிவிஷன் மெகானிகல் டிரேடில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அதாவது வானெலி அண்டு தொலை காட்சி தொழில் நுட்பம். இந்தப் பிரிவுகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் உண்டு. ஒரு ஆசிரியர் 24-3-1966-லிருந்தும் மற்றொரு ஆசிரியர் 5-1-1967 லிருந்தும் மேற்கண்ட இரண்டு பிரிவுகளிலும் வேலை பார்த்தார்கள். 1-8-1966-க்கு முன்பு ஒரே பிரிவுதான் இருந்தது. அதற்குப் பிறகுதான் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. 1-8-1966-லிருந்து 1967 ஜனவரி வரையில் ஒரு ஆசிரியரே இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். புதியதாக நியமிக்கப்பட்டவர் 3-7-1967-ல் ராஜிநாமா செய்து விட்டார். இந்த இடத்திற்கு வேறு ஒருவர் நியமிக்கப்பட்டார். அதாவது அம்பத்தூரிலிருந்து ஒருவர் அந்த இடத்திற்கு மாற்றப்பட்டார். அவர் தொடர்ந்து மருத்துவ விடுப்பு எடுத்துக்கொண்டு அங்கே போய்

சேரவே இல்லை. ஆகவே, மற்றப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர் இந்தப் பிரிவையும் சேர்த்து பார்த்துக்கொண்டு வந்தார். அந்த இடம் இடையிலே மூன்று மாதம் காலம்தான் காலியாக இருந்தது என்பது அல்ல. இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொள்ளக்கூடிய திறமை படைத்தவர்தான் 3 மாதங்களுக்கு இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் எண்ணிக்கையும் அதிகமாக இல்லை. 1966-ல் ஜூனியர் பிரிவிலும், சீனியர் பிரிவிலும் முறையே 10, 14 மாணவர்களும், 1967-ல் 21, 7 மாணவர்கள்தான் இருந்தார்கள். இந்த இரண்டு பிரிவுகளையும் சேர்த்து ஒரு ஆசிரியர் பார்ப்பது அதிக கஷ்டமில்லை. சீனியர் பாட்ச்சிலுள்ள 7 மாணவர்கள் தனியாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படாவிட்டால் 12-11-1967-லிருந்து உண்ணு நோன்பு இருப்பதாக அறிவித்தார்கள். இதற்கிடையில் இன்னொரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு அவர் 9-11-1967-ல் வேலையில் சேர்ந்தார். இருந்தும் அந்த 7 மாணவர்கள் திருப்தியில்லாமல் 10-11-1967, 13-11-1967-ல் பள்ளிக்கு வரவில்லை. 14-11-1967-ல் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. 15-11-1967-ல் மாணவர்களே திரும்ப வகுப்புக்கு வந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அங்கே எல்லாம் அமைதியாக நடைபெறுகிறது.

திரு. பி. வேலுசாமி: இந்தப் பிரிவில் பயிற்சி பெறுகிறார்களே, அப்படி பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு சர்க்காரில் ஏதாகிலும் இந்தப் பிரிவைச் சேர்ந்த காலி ஸ்தானங்கள் வரும்பொழுது அவர்களுக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கூடுமானவரையில் ஐ.டி.ஐ.-யில் படித்து வெளியேறுகிறவர்களுக்குத்தான், தனியார் துறையானாலும் சரி, பொதுத் துறையானாலும் சரி, அவர்கள் ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் தக்க பயிற்சி பெற்றிருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு முதல் சலுகை அளித்து எடுத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலைதான் இருந்து கொண்டு வருகிறது.

ஏற்றுமதி-இறக்குமதி

* 48 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதி--இறக்குமதிகளைத் தனியார் துறையில் அல்லாமல் பொதுத் துறையிலேயே ஏற்று நடத்த வேண்டுமென்பதை பற்றிய ஆலோசனையை மத்திய சர்க்காரிடம் நமது சர்க்கார் கொடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.